# இயேசுவின் ஊழியம்

***மத்தேயு 4:23-25, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். 24. அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். 25. கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.***

*புதிய ஏற்பாட்டில், குறிப்பாய் சுவிசேஷ புத்தகங்களிலும் அப்போஸ்தலர் நடபடிகளிலும் இயேசு கிறிஸ்து அவருடைய சுகமாக்கும் ஊழியத்தின் மூலமாகவே தன்னுடைய தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.*

*சுகமாக்குதல் என்பது இயேசு தன்னுடைய வல்லமையைப் பிரதிபலிக்க அவர் பயன்படுத்திய மிக முக்கியமான ஒன்று.*

*யோவான் சுவிசேஷம் முழுமையும் இதை மையமாய் வைத்தே எழுதப்பட்டுள்ளது.*

*யோவான் குறிப்பாய் இரண்டு காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்:*

1. *அவருடைய வார்த்தைகள்*
2. *அவருடைய ஊழியங்கள்*

*மத்தேயு நமக்கு அறிமுகப்படுத்துகிற விஷயத்தை யோவான் மிகவும் விரிவாய் முக்கியத்துவப்படுத்தி விவரிக்கிறார்.*

*யோவான் சுவிசேஷத்திலிருந்து ஞாயிற்றுகிழமைகளில் செய்திகளை நாம் கேட்டு முடித்தோம்.*

***யோவான் 1:1, ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.***

*இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை பிரதிபலிக்கும் ஓர் சிறப்பான வசனம். இயேசு சிருஷ்டிகராகவும் இருப்பதால், யோவான் அவருடைய தெய்வீகத்தை நிரூபிப்பதற்கு மேலும் முயற்சிக்கிறார்.*

***யோவான் 1:14, அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.***

***யோவான் 1:18, தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.***

*இந்த இயேசு கிறிஸ்துவே மாம்சத்தில் வந்த தேவன், மகிமையில் வெளிப்பட்ட தேவன், நிரூபிக்கப்பட்ட கடவுள்.*

*இயேசுவின் அற்புதங்களை நடப்பிக்கும் வல்லமையை வைத்து யோவான் அதை நிரூபிக்கிறார்.*

***யோவான் 2:11, இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.***

***யோவான் 5:36, யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு, அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.***

*இயேசு தான் செய்த கிரியைகளையும் அற்புதங்களையும் தன்னுடைய தெய்வீகத்தை நிரூபிக்கும் சாட்சிகள் என்று அவரே அறிவிக்கிறார்.*

***யோவான் 7:31, ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள்.***

*இயேசுவின் அற்புதங்களைப் பார்த்து, ஜனங்களெல்லாரும் இயேசுவுக்கு மேசியா என்னும் அங்கீகாரம் கொடுக்கப்பட்டதாக நம்பினர். இவர் செய்த அற்புதங்களைப் பார்க்கிலும் வேறொருவர் வந்து அதிகப்படியாய் செய்வாரோ?*

***யோவான் 5:37-38, என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. 38. அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை.***

*அவருடைய கிரியைகளே சாட்சி!*

***யோவான் 14:11, நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.***

***யோவான் 20:30-31, இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். 31. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.***

*இயேசுகிறிஸ்துவின் சொந்த வாக்கியங்கள் பலவற்றை யோவான் மேற்கோள் காண்பித்துள்ளார்.*

*"ஜீவ அப்பம் நானே" (யோவான் 6:35, 41, 48, 51)*

*"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 8:12)*

*"நானே ஆடுகளுக்கு வாசல்" (யோவான் 10:7,9)*

*"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25)*

*"நானே நல்ல மேய்ப்பன்" (யோவான் 10:11,14)*

*"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6)*

*“நான் மெய்யான திராட்சச்செடி” (யோவான் 15:1,5)*

*அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில், பெந்தெகொஸ்தே நாளின்போது, பேதுரு தன்னுடைய முதல் செய்தியைப் பிரசங்கிக்கிறார்.*

***அப்போஸ்தலர் 2:22, இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய <u>இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும்</u> நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.***

*இயேசு தன்னுடைய மேசியா அங்கீகாரத்திற்கு ஆதாரமாய் தன் அற்புதக் கிரியைகளைக் காண்பிக்கிறார்.*

*அவருடைய இந்த கிரியைகளை நம்ப மறுப்பது அவருடைய தெய்வீகத்தை நிராகரிப்பதற்கு சமம்.*

*அவருடைய தெய்வீகத்தை மறுப்பது அவருடைய கிரியைகளை நிராகரிப்பதற்கு சமம்.*

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களின் முழுமையான நோக்கம், இயேசுவை இன்னொரு சாதாரண மனதனாய் காண்பித்துக் கொடுப்பது அல்ல; மாறாக, அவரை தேவனென்று நிரூபிப்பதே அவர்களுடைய நோக்கம்.*

***யோவான் 12:47-48, ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். 48. என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.***

*நீங்கள் இயேசுவின் தெய்வீகத்தையும், அவருடைய வார்த்தைகளையும், அவருடைய கிரியைகளையும் நிராகரித்து, உங்கள் மீதே தீமையை வருவித்துக்கொள்ளுகிறீர்கள். நம்முடைய அவிசுவாசமே நம்மை நியாயந்தீர்த்து, நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறது.*

*இயேசுவின் வார்த்தைகளையும் அவருடைய கிரியைகளையும் வெளிப்படுத்துவதே யோவானுடைய பிரதான நோக்கமாயிருக்கிறது.*

*இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வரும்போது வார்த்தை போதிப்பதும் கிரியை நடப்பிப்பதுமே அவருடைய ஊழியமாயிருந்தது. அவர் சொன்னதும் செய்ததுமே அவருடைய மேசியா அங்கீகாரத்தை நிரூபிக்கின்ற சான்றுகள். அவர் மற்ற சராசரி மனிதர்களைப் போன்றவர் அல்ல; அவர் தேவன் என்பதை நிரூபிக்கும் சான்று அதுவே.*

***மத்தேயு 4:23, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.***

*“போதித்தலும் பிரசங்கித்தலும்” அவருடைய வார்த்தைகள்.*

*“சுகமாக்குதல்” அவருடைய கிரியை.*

*அவைகள் இணைந்தே இயேசுவின் ஊழியத்தை முழுமைபெறச் செய்தது!*

*யோவான் 9ஆம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குருடனுடைய சம்பவத்தை சற்று சிந்திப்போம்.*

***யோவான் 9:2, அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.***

*அவர்களுடைய இறையியல் உபதேசத்தில் பிழை உள்ளது. பாவமே வியாதியை தோற்றுவிக்கிறது என்று இவர்கள் நம்பினர். அது எல்லாவேளைகளிலும் உண்மையில்லை.*

*சிலவேளைகளில், பாவமும் வியாதியை தோற்றுவிக்கும்.*

*அனனியாவும் சப்பீராளும் வியாதிப்பட்டு மரித்துப்போனார்கள்.*

*1 கொரிந்தியர் 11ஆம் அதிகாரத்தில், ஜனங்கள் வியாதிப்பட்டு, பெலவீனப்பட்டு, சிலர் மரித்தும் போனார்கள்.*

*பாவத்தை சிட்சிப்பதற்கும் தண்டிப்பதற்கும் ஆண்டவர் வியாதியை ஒரு காரணியாய் பயன்படுத்துவார். ஆனால் வியாதிப்பட்டவர்கள் அனைவரும் பாவிகளல்ல.*

***யோபுவின் சம்பவம் எப்படி?***

***யோபுவின் வியாதிக்குக் காரணம் அவனுடைய பாவமா?***

*இல்லை.*

*யோபுவைப் போன்ற ஒரு நீதிமான் பூமியில் இல்லை.*

*அவர்களின் கேள்விக்கு இயேசுவின் பதிலென்ன?*

***யோவான் 9:3, இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.***

*இயேசுவின் சகமாக்குதலுக்கு பாத்திரராகும் பொருட்டே தேவன் சிலரை வியாதியஸ்தர்களாய் படைத்து, அதின் மூலம் அவருடைய தெய்வீகம் விளங்கும்படி அனுமதிக்கிறார்.*

*அந்த குருடன் பார்வையடைகிறான். யூத மார்க்க தலைவர்கள் அவனையும் அவனுடைய பெற்றோரையும் கேள்வி கேட்கின்றனர்.*

***யோவான் 9:30, அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்.***

*அந்த குருடன் அவருடைய மேசியா அங்கீகாரத்திற்கான சான்றைப் பெற்றுக்கொண்டான்.*

*மத்தேயு 4ஆம் அதிகாரத்தில், இயேசுவின் அதிகாரப்பூர்வமான ஊழியம் துவங்குகிறது.*

*இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வம்ச வரலாறு மற்றும் அவருக்கு செலுத்தப்பட்ட கனத்தையும் மத்தேயு பதிவுசெய்கிறார். தற்போது ராஜாவின் ஊழியத்தின் துவக்கத்தைக் குறித்து அறிவிக்கிறார்.*

*இயேசு தன்னுடைய ஊழியத்தை சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான செய்தியோடும் சரியான மக்களிடமும் துவங்கினார்.*

*இயேசுவுக்கு மிகத் தெளிவான ஒரு திட்டம் இருந்தது.*

*அவருடைய வார்த்தையின் மூலமாகவும் அவருடைய கிரியைகளின் மூலமாகவும் அவர் தன்னுடைய தெய்வீகத்தை நிரூபிக்கிறார்.*

*அவர் சொன்ன காரியங்களைக் கொண்டும் அவர் செய்த செயல்களை அடிப்படையாய் வைத்தும் அவர் உண்மையில் யார் என்பதை இயேசு விளங்கப்பண்ணுகிறார்.*

*இந்த இரண்டு காரியங்களால் மக்கள் ஈர்க்கப்பட்டனர்.*

***யோவான் 7:46, சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்.***

*அவருடைய வார்த்தையைக் கண்டு அவர்கள் அதிர்ந்துபோனார்கள்.*

*யூதர்களுக்கு மத்தியில் பிரிவினைகள் இருந்தது.*

***யோவான் 10:19-21, இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று. 20. அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள். 21. வேறே சிலர்: இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமா என்றார்கள்.***

*அவருடைய வார்த்தைகளும் செயல்களும் அவர்களை மேற்கொண்டது.*

*இவைகள் அவருடைய மேசியாத்துவத்தை உறுதிபடுத்தியது.*

*இயேசு சரியான திட்டத்தோடு துவங்குகிறார்.*

***வச. 23, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.***

*கலிலேயாவில் இயேசு செய்த அனைத்து ஊழியங்களையும் குறித்த சுருக்கவுரையே இந்த வசனம்.*

*மத்தேயு இந்த ஒரு வசனத்தை அடிப்படையாய் கொண்டு, 5ஆம் அதிகாரத்திலிருந்து 9ஆம் அதிகாரம் வரைக்கும் அதை விவரித்துள்ளார்.*

*5-7 அதிகாரங்களில் **அவருடைய வார்த்தைகளைக்** குறித்து விளக்குகிறார்.*

*8-9 அதிகாரங்களில்* **அவருடைய செய்கைகளை** *முக்கியப்படுத்துகிறார்.*

*ஆகையால் இந்த இரண்டு காரியங்களையும் குறித்து மத்தேயு இங்ஙனம் எளிமையாய் அறிமுகப்படுத்திவிட்டு,* ***மத்தேயு 5:1-9:38****இல் அவற்றை விளக்கமாக விவரித்துள்ளார்.*

*மத்தேயு 5-7: மலைப்பிரசங்கம் மூலமாய் வெளிப்பட்ட அவருடைய மேன்மையான வார்த்தைகள்.*

*8-9 அதிகாரங்களில் அவர் நடப்பித்த அற்புத கிரியைகள் இடம்பெற்றுள்ளது.*

*அவர் எல்லா இடங்களுக்கும் விடாமல் தொடர்ந்து சென்றார். அவர் எப்போதுமே ஓடிக்கொண்டேயிருந்தார். "கலிலேயா எங்கும்" என்பது அதை தெளிவாய் உறுதிப்படுத்துகிறது.*

*கலிலேயா என்பது பரந்த நிலப்பரப்பு. அது 40 மைல் நீளமும் 70 மைல் அகலமும் கொண்டது. யோசிபஸ் என்னும் சரித்திர நிபுணரின் கூற்றுப்படி, கலிலேயாவில் 204 கிராமங்கள் இருந்துள்ளது. கி.பி. 66இல் யோசிபஸ் கலிலேயாவின் ஆளுநராய் பணியாற்றியுள்ளார். அவர் வெறும் சரித்திர நிபுணர் மட்டுமல்ல; அவர் ஆளுநராயும் பணியாற்றியுள்ளார்.*

*இந்த 70 மைல் நீளமும் 40 மைல் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் 204 பட்டணங்களும் அதில் 15,000 மக்கள் வசித்ததாகவும் யோசிபஸ் அறிவிக்கிறார்.*

*இயேசு கிறிஸ்துவுக்கு பின் ஒரு தலைமுறை கடந்து, கலிலேயாவின் மக்கள் தொகை 3 மில்லியனுக்கு அதிகரித்தது என்றும் யோசிபஸ் எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவின் நாட்களில் மக்கள் தொகை எவ்வளவாய் இருந்தது என்பது நமக்குத் தெரியாது. ஆனால் எண்ணிக்கையில் பெரிய மாற்றங்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை.*

*204 பட்டணங்களையும் சந்தித்து, அவர்களிடத்தில் போதனை செய்வது மிகப்பெரிய அலுவல் என்பதால், இயேசு எப்போதுமே ஓய்வில்லாமல் சுற்றித் திரிந்தார். அவர் ஒரு நாளில் ஒருபட்டணத்திற்குப் போனாலும், கலிலேயா முழுமையையும் சந்திக்க ஏறத்தாழ அவருக்கு அரை வருடம் பிடித்திருக்கும் என்று ஒருவர் கணக்கிடுகிறார். அதுவும் ஒரு ஊரில் ஒரே நாள் தங்கியிருந்தால் மட்டுமே அது சாத்தியம்.*

*இயேசு கிறிஸ்து சுற்றித்திரிந்து எவ்வளவு பேரை சந்திக்க முடியுமோ அவ்வளவு பேரையும் சந்தித்தார். இங்கே யூதர்களும் புறஜாதி மக்களும் கலந்திருந்தனர். யூதர்களில் சிலரும் புறஜாதி கலாச்சாரத்திற்கு உட்பட்டிருந்தனர். அவர் துவக்கத்திலிருந்தே தன்னை உலக இரட்சகராகவே அறிமுகப்படுத்தினார்.*

*ஆகையால் இயேசு அந்த மக்கள் மத்தியில் போதனை, பிரசங்கம், மற்றும் சுகமாக்குதல் மூலமாக ஊழியம் செய்தார்.*

## *அவருடைய வார்த்தைகள்:*

***வச. 23, ஜெப ஆலயங்களில் உபதேசித்து***

*கலிலேயாவில் இருந்தபோது, இயேசு அங்குள்ள சினகாக் என்று அழைக்கப்பட்ட ஜெப ஆலயங்களையே தன்னுடைய ஊழியத்தின் மைய ஸ்தலமாய் தெரிந்துகொண்டார்.*

*சினகாக் என்பது யூதர்களுடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு ஸ்தலம். கிறிஸ்தவர்களுக்கு திருச்சபை எந்த அளவிற்கு இன்று முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறதோ, அதே போன்று யூதர்களுக்கு சினகாக் இருந்தது.*

*அவர்களுடைய குடும்பம் அங்கே இருந்தது. அவர்களின் பிள்ளைகள் அங்கே இருந்தனர். அவர்களுடைய சிநேகிதர்கள், மற்றும் அவர்களுடைய பெரும்பாலான ஜீவியமே சினகாகை சார்ந்தே இருந்துள்ளது.*

*சில வேளைகளில் இந்த ஸ்தலம் அவர்களுக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பயன்பட்டது. இது யூதர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம்.*

*இந்த சினகாக் ஆலயங்களிலிருந்து ஒருவரை வெளியேற்றுவதே மிகவும் கடினமான தண்டனையாகக் கருதப்பட்டது. யூதர்கள் கிறிஸ்தவர்களாய் மாறும்போது இதுவே அவர்களுக்கு நேரிட்டது. அவர்கள் சினகாக்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு இது முக்கியமான அங்கீகாரம். அதற்காகவே எபிரெயர் புத்தகம் முழுமையும் எழுதப்பட்டது. அது கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. அதிலும் சுவிசேஷத்தின் மீது நம்பிக்கை வைத்தாலும், சினகாகிலிருந்து தங்களை வெளியேற்றி விடுவார்களோ என்று அஞ்சி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தயங்குகிற கூட்டத்திற்கும் புத்தகத்தில் எச்சரிப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த ஸ்தலம் அவர்களின் வாழ்க்கைக்கு முக்கியமான திறவுகோல்.*

*பொதுவாக ஒரு ஊரின் உயர்ந்த இடங்களில் அல்லது மலைகளில் சினகாக் கட்டப்பட்டது. ஒரு ஊரில் அனைவரின் பார்வைக்கு இலகுவாய் தென்படும் வகையில் உயர்ந்த இடங்களை தேர்வுசெய்வது மட்டுமின்றி, வானத்தை நோக்கி உயர்ந்திருக்கும் உயரமான கம்பத்தை நட்டு அடையாளப்படுத்துவர்.*

*சிறிய ஆங்கிலேய ஊர்களுக்கு நாம் செல்லும்போது, அதை நாம் காணமுடியும். சிலவேளைகளில் மலைகள் இல்லாத ஊர் என்றால், ஏரிகளின் அருகே இந்த சினகாக் கட்டப்பட்டிருக்கும்.*

*சினகாக் என்னும் இந்த தேவாலயங்களை பெரும்பாலும் கூரையில்லாமல் கட்டுவது வழக்கம். அவர்களின் ஆராதனை நேரடியாய் தேவனிடத்திற்கு போகவேண்டும் என்பதை அடையாளப்படுத்துவதற்காய் அப்படி செய்தனர். கப்பர்நகூமில் கண்டறியப்பட்ட இந்த தேவாலயங்கள் கூரையில்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.*

*பரிசுத்த ஓய்வுநாளான ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இந்த சினகாக் ஆலயங்களில் தொழுகை ஏறெடுக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து துவங்கி சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரை ஓய்வநாள் நீடிக்கிறது. ஒவ்வொரு வாரத்தின் இரண்டாம் மற்றும் ஐந்தாம் நாளிலும் பரிசுத்த ஓய்வுநாளிலும் சினகாக்கில் ஆராதனை நடத்தப்பட்டது.*

*பண்டிகை நாட்களிலும் விசேஷ தினங்களிலும் அவர்கள் ஆராதனைகளை நடத்தினர்.*

***ஓய்வு நாள் ஆராதனை ஒழுங்குகள்:***

- *நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும்.*
- *அழைக்கப்பட்ட சில நபர்களால் தீர்க்கதரிசன புத்தகங்கள் வாசிக்கப்படும்.*
- *தலைவர்களால் ஜெபம் ஏறெடுக்கப்படும்.*
- *ஆமென் மற்றும் துதிகளை மக்கள் ஏறெடுப்பார்கள்.*
- *குறிப்பிட்ட வேதப்பகுதிகளிலிருந்து போதனை செய்யப்படும்.*
- *ஏதேனும் விசேஷித்த ரபிமார்கள் அழைக்கப்பட்டிருந்தால், பெரும்பாலும் அவர்களே போதனை செய்ய அனுமதிக்கப்படுவர்.*

*சரியாய் இந்த காலகட்டத்தில் தான் பவுல் அப்போஸ்தலர் சினகாக்கிற்கு கடந்து சென்று பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட சில வேதப்பகுதியிலிருந்து பிரசங்கிக்கிறார்.*

*சினகாக் தேவாலயத்திற்கு பத்து பேர் கொண்ட நிர்வாகக் குழுவினர் ஏற்படுத்தப்பட்டிருப்பார்கள். அழைக்கப்பட்ட பத்து மூப்பர்களும் சினகாக்கின் ஆளுநர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நியாயாதிபதிகளாக செயல்பட்டனர். அவர்கள் யூத மதத்திற்கு மதம் மாறின மக்களை உள்ளே அனுமதிப்பதையும் அவர்களை வெளியேற்றுவதையும் குறித்து தீர்மானிப்பர். அவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்கும் பொறுப்பையும் ஏற்று செயல்படுத்தினர்.*

*அதின் நான்காவது ஆளுநர், திருச்சபையின் தூதன் என்று அழைக்கப்பட்ட நிர்வாகக்குழுவின் தலைவர்.*

*மற்றவர்களெல்லாரும் முதலாம் மற்றும் மூன்றாம் ஆளுநர்களின் வழிநடத்துதலை செயல்படுத்துகிற ஊழியர்கள்.*

*யூத பாரம்பரியத்தின்படி, அதின் எட்டாம் ஆளுநர் எபிரெய மொழியின் வியாக்கியானி. பழமையான எபிரெயத்திலிருந்து அவர்களின் காலகட்டத்திற்குரிய எபிரெயத்திற்கு வேதத்தை வியாக்கியானம் செய்பவர்கள் இவர்கள்.*

*அதில் ஒன்பதாம் ஆளுநர் இறையியல் பள்ளியின் பொறுப்பாளராய் செயல்பட்டவர். ஒவ்வொரு சினகாக் தேவாலயத்திலும் இறையில் பள்ளி இணைந்திருக்கும். அதில் பத்தாவது ஆளுநர், இந்த இறையியல் பள்ளி ஆசிரியரின் வார்த்தைகளை விளங்கும்படி வியாக்கியானம் செய்பவர். பொதுவாக இறையியல் பள்ளி ஆசிரியரின் போதனைகள் அறிவுக்கு எட்டாதவண்ணம் இருப்பதால், அவருடைய வார்த்தைகளை இவர் புரியும்படி வியாக்கியானம் செய்வார். இவவே அவர்களுடைய நேர்த்தியான நிர்வாக மற்றும் அதிகார ஒழுங்கு.*

*சினகாக் தேவாலங்கள் அவ்வப்போது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நீதிமன்றங்களாகவும் செயல்பட்டது. அங்கே தீர்ப்பு வழங்குவதும், தண்டனை அறிவிப்பதும் அரங்கேற்றப்பட்டது.*

*இயேசு கிறிஸ்துவின் நாட்களில் ரோம சாம்ராஜ்யம் மரண தண்டனை விதிக்கும் அதிகாரத்தை யூதர்களிடமிருந்து பறித்துக்கொண்டது. மற்றபடி, அவர்கள் தாங்கள் நினைத்த எதையும் செய்யமுடியும். அவர்கள் தங்களுடைய காரியங்களை தாங்களே வடிவமைத்துக்கொள்ள முடியும். மரண தண்டனை விதிப்பதை மட்டும் அவர்கள் அரங்கேற்றமுடியாது. அதினால் தான் இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்யும்பொருட்டு, அவர்களை ரோமர்களிடம் ஒப்படைக்கின்றனர்.*

*சினகாக் என்னும் தேவாலயங்களே தங்களுடைய எல்லாவற்றையும் தாங்களே ஏற்படுத்திக்கொண்டு ஆட்சி செய்தனர்.*

*இயேசுவின் நாட்களில் இருந்த சிறிய கிராமங்களிலும் கூட அவர்களுக்கென்று நியாயம் விசாரிக்கும் நீதிமன்றங்கள் இருந்தது. சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பொதுப் பள்ளியாகவும் சினகாக் செயல்பட்டது. சிறுவர்கள் அங்கு சென்ற டால்முத் என்னும் யூத இலக்கியத்தைக் கற்பது வழக்கம்.*

*ஆடவர்களுக்கு இந்த சினகாக் இறையியல் பள்ளியாக செயல்பட்டது. எனவே யூதர்களின் வாழ்க்கையின் மையஸ்தலமாய் சினகாக் விளங்கியது. இயேசு அங்கு போகிறார் என்றால், அவர் யூதர்களின் வாழ்வாதாரத்தின் மத்தியில் கால் பதிக்கிறார் என்று அர்த்தம்.*

*ஆலயத்திற்கும் சினகாக்கிற்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. அவர்களுக்கு ஒரே ஆலயம் மட்டுமே உண்டு. அதுவும் எருசலேமில் இருந்தது. கி.மு. 70ல் டைட்டஸ் வந்து அதை தரைமட்டமாக்கினதிலிருந்து அந்த ஆலயமும் அவர்களுக்கு இல்லாமல் போனது என்பது நமக்குத் தெரியும்.*

*யூதர்கள் எங்கெல்லாம் தங்கியிருந்தார்களோ, குறைந்த பட்சம் பத்து நபர்கள் இருந்தால் அங்கெல்லாம் அவர்கள் இந்த சினகாக் ஆலயத்தை துவங்க முடியும்.*

*அவைகள் கிறிஸ்துவுக்கு சாதகமான ஊழியஸ்தலமாய் இருந்தது. பவுல் அப்போஸ்தலருக்கும் சாதகமான ஊழியஸ்தலமாய் இருந்தது.*

*இயேசு கிறிஸ்து தேவாலயத்திற்குள் பிரவேசித்து அங்கு போதிக்கத் துவங்கும்வரை ஆலயம் என்பது போதிப்பதற்கும் பிரசங்கிப்பதற்குமான இடமாய் இல்லை. ஆலயம் என்பது பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துகிற இடம். ஆனால் சினகாக் என்பது போதிப்பதற்கும் பிரசங்கிப்பதற்குமான இடமாய் செயல்பட்டது.*

*இன்றைய காலகட்டத்தின் திருச்சபைகள் இந்த சினகாக் மாதிரியையே தத்தெடுத்துக் கொண்டுள்ளது. தற்போது நம்மிடம் யூத சினகாக் ஆலயங்கள் இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.*

*விசேஷ பிரசங்கியாராக ரபீ மார்களின் ஸ்தானத்தையோ அல்லது போதகரின் ஸ்தானத்தையோ வாய்ப்பாய் கருதி, இயேசு அங்கு போதித்தார். இது இஸ்ரவேலர்களின் இருதயத்தை எட்டியது. தேவனுக்காய் அதிக வைராக்கியமாய் செயல்பட்ட அனைவரும் இந்த சினகாக் ஆலயத்தின் அங்கத்தினராய் இருந்தனர்.*

*மீட்கப்பட வேண்டியவர்கள் அங்கு இருந்தனர். ஆகையால் எங்கு பேசினால் தன்னுடைய வார்த்தைகள் கேட்கப்படுமோ இயேசு அங்கு செல்லுகிறார். அதுவே சினகாக்.*

*இயேசு கிறிஸ்து சத்தியத்தை போதிப்பார். வேதத்தைத் திறந்து அதின் விளக்கத்தை எடுத்து போதிப்பார். அவர் நாசரேத்தில் இருந்தபோதும், தன்னுடைய ஊழியத்திற்கு பிரச்சனை ஏற்படக்கூடிய அளவிற்கு அவரைக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்களை துணிந்து வெளிப்படையாய் கட்டவிழ்த்தார்.*

*மலைப் பிரசங்கத்திலும் கூட "என்று சொல்லப்பட்டதைக் கேட்டீர்கள், வேதம் சொல்லுகிறது, நான் சொல்லுகிறேன்" என்று இயேசு அடிக்கடி வேதாகமத்தையும் பண்டைய பாரம்பரிய தகவல்களையும் மேற்கோள் காட்டுவதை நாம் பார்க்கமுடியும். அதைச் சொல்லி, தன்னுடைய போதனையை ஏறெடுத்து, மக்களின் கவனத்தை தன்னிடமாய் திருப்புவது வழக்கம்.*

*ஆகையால் இயேசு சினகாக் ஆலயங்களில் பிரசங்கித்துள்ளார்.*

*“**டிடாஸ்க்**” என்ற வார்த்தைக்கு சத்தியத்தை போதிப்பது என்று பொருள். தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கிற வார்த்தை இது. செய்திகளையும் தகவல்களையும் பரிமாற்றம் செய்வதை இவ்வார்த்தை பிரதிபலிக்கிறது. அதையே தான் இயேசுவும் செய்தார்.*

*இயேசு வேதப்பகுதியை மையமாக வைத்தே பிரசங்கத்தை ஏறெடுத்தார். அந்த வேதப்பகுதியில் இருக்கும் கருத்துக்களை அடிப்படையாய் கொண்டே போதனை செய்தார். கர்த்தருடைய வார்த்தையை இப்படி போதிப்பதே சிறந்த வழி என்று நான் உளமாற நம்புகிறேன்.*

***வச. 23, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் <u>பிரசங்கித்து</u>,***

*“**க்ரஸ்**” என்னும் கிரேக்க வார்த்தைக்கு கீழ்க்கண்ட அர்த்தங்கள் கொடுக்கப்படுகிறது:*

*“போதித்தல்”*

*“வெளிப்படுத்துதல்”*

*“கதறுதல்”*

*போதனை என்பது அறிவுறுத்தக்கூடிய கவனமான கருத்துக்களை பகிரும் செயலைக் குறிக்கிறது. அது ஒரு சிந்தைக்கும் இன்னொரு சிந்தைக்கும் உண்டான தொடர்பு.*

*பிரசங்கித்தல் என்பது மக்களைக் குறித்ததான இயேசு கிறிஸ்துவின் ஆத்தும கதறலை பிரதிபலிக்கிறது. இதுபோன்ற செய்கை சினகாக்கின் வழக்கமான செய்கை இல்லை என்றாலும் இயேசு இவ்விரண்டையும் இணைத்தே தன்னுடைய ஊழியத்தில் பயன்படுத்தினார். போதனை இல்லாத பிரசங்கமும் இல்லை. பிரசங்கம் இல்லாத போதனையும் இல்லை. பிரசங்கம் என்பது ஆத்தும கதறல்.*

*பிரசங்கித்தல் என்பது சுவிசேஷத்தை பிரகடனப்படுத்துவது, போதித்தல் என்பது சுவிசேஷத்தை விளக்குவது என்று யாரோ ஒருவர் சொன்னது நினைவுக்கு வருகிறது.*

*பிரசங்கத்திற்கும் போதனைக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கிறது. ஒரு நல்ல பிரசங்கம் என்பது நேர்த்தியான ஒரு போதனை என்று நாம் அறிந்திருந்தாலும் அதினால் வலியுறுத்தப்படுகிற கருத்தில் வித்தியாசம் உண்டு.*

- *பிரசங்கம் என்பது பறைசாற்றுதல்.*
- *போதனை என்பது பறைசாற்றப்பட்ட செய்தியின் மிகத் தெளிவான தகவல்களை விளக்கிக் கூறுதல்.*

*இயேசு பிரசங்கத்தையும் போதனையையும் இணைத்தே செய்தார்.*

***வச. 23, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து,***

*இராஜ்யத்தின் சுவிசேஷம், இராஜ்யத்தின் நற்செய்தி.*

*இயேசு எப்போதுமே இராஜ்யத்தின் சுவிசேஷத்தையே பிரசங்கித்தார்.*

*இயேசு உயிர்த்தெழுந்ததிலிருந்து அவர் பரமேறி செல்லுவதற்குள் சீஷர்களுக்கு 40 நாட்கள் தரிசனமானார்.*

***அப்போஸ்தலர் 1:2-3, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன். 3. அவர் பாடுபாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.***

*மத்தேயு சுவிசேஷத்தில் அவர் தன்னுடைய ஊழியத்தை துவங்கியதிலிருந்து அவர் பரமேறி போன இந்த தருணம் வரை அவர் இராஜ்யத்தின் சத்தியத்தைத் தவிர்த்து வேறெதையும் பிரசங்கிக்கவில்லை.*

*தன் செய்திக்குப் பொருந்தாத சமுதாய பிரச்சனைகளை இயேசு பொருட்படுத்தவில்லை. அவர் அரசியல் பேசவில்லை. கிளர்ச்சி செய்யவில்லை. பொருளாதாரத்தில் ஈடுபடவில்லை. அவர் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தே பிரசங்கித்தார்.*

*நாம் பின்பற்றவதற்கு நேர்த்தியான ஒரு மாதிரி.*

***இராஜ்யத்தி சுவிசேஷம் என்ன?***

*சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள்.*

*கெட்ட செய்திகளால் உலகம் நிறைந்திருக்கிறது. இது ஒன்றே நற்செய்தி!*

*இயேசுவின் பிரசங்கங்களும் போதனைகளும் நற்செய்திகளால் நிறைந்திருந்தது.*

*யோவான் ஸ்நானகனின் பிரசங்கம் நற்செய்தி என்று குறிப்பிடப்படவில்லை.*

*யோவான் ஸ்நானகன் தன்னுடைய பிரசங்கத்தில் ஆக்கினைத் தீர்ப்பை அதிகமாய் வலியுறுத்தினார்.*

*கோடாரியானது வேர் அருகே வைக்கப்பட்டுள்ளது,*

*தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது,*

*அக்கினி சுட்டெரிக்கிறது.*

*இயேசு வரும் வரைக்கும் யோவானுடைய பிரசங்கம் நற்செய்தி என்று அறிவிக்கப்படவில்லை. இயேசு வரும் வரைக்கும் நற்செய்தி என்று ஒன்று இல்லவே இல்லை.*

*“மனந்திரும்புங்கள், ஆயத்தப்படுங்கள், வருங்கோபத்திற்கு தப்பித்துக்கொள்ளுங்கள்” என்பதே யோவானுடைய பிரசங்கம்.*

*அதின் இன்னொரு பக்கத்தை இயேசு பிரசங்கித்தார். எல்லோரையும் அவரிடத்திற்கு வரும்படி அழைப்பு கொடுத்து, அவர்களை பரலோகத்திற்கு கூட்டிச் செல்வதாக வாக்குக்கொடுக்கிறார். அதுவே நற்செய்தி.*

*பல்வேறு மாய்மாலங்களையும் யூதர்களிடமிருந்து எழும்பின எதிர்ப்புகளையும் அனுபவித்த பின்பு, இயேசுவின் செய்தி யோவானுடையதைக் காட்டிலும் அதிக வீரியம் கொண்டதாயிருந்தது. ஆனால் ஆரம்பத்தில் இயேசு கடினமான வார்த்தைகள் எதையும் பிரயோகிக்கவில்லை.*

***நற்செய்தி என்ன?***

*இராஜ்யம்.*

*தேவன் தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டப்போகிறார். நாம் இருளின் இராஜ்யத்திலிருந்து விடுபட்டு குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படும்போது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்று பவுல் சொன்னதுபோல நாமும் அந்த இராஜ்யத்தின் அங்கத்தினர்களாய் மாறுகிறோம். தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷமே இன்றும் பிரசங்கிக்கப்படுகிறது.*

*நற்செய்தி இதுவே:*

*தேவனுக்கு இராஜ்யம் ஒன்று இருக்கிறது.*

*நீ அதின் குடிமகனாய் மாற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

***எப்படி?***

*அதுவே நற்செய்தி*

*இராஜ்யத்தின் அம்சங்கள் பரிசுத்த ஆவியின் மூலம் நம்மிடத்தில் வாசம் செய்கிறது. பூமியில் சம்பவிக்கும் ஆயிர வருட அரசாட்சியின் அம்சம் நமக்குள் இருக்கிறது. புதிய வானமும் புதிய பூமியும் உண்டாக்கப்பட்டு தேவனோடு என்றென்றும் இருக்கத்தக்க நித்திய இராஜ்யம் மற்றும் மகிமையின் அம்சம் நமக்குள்ளே இருக்கிறது.*

*ரோம இராஜ்யத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இஸ்ரவேலர்கள் சோர்ந்துபோயிருந்தனர். அதற்கு முன்பாக கிரேக்க இராஜ்யத்தின் ஆளுகையிலும், அதற்கும் முன்பாக மேதிய பெர்சிய இராஜ்யத்தின் ஆளுகையிலும், அதற்கும் முன்பாக பாபிலோனியர்களின் ஆளுகைக்கும் உட்பட்டும் இருந்தனர். அவர்கள் தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்தி தங்கள் இராஜ்யத்தை ஸ்தாபிக்க முயற்சித்தாலும், அதுவும் தீமையிலும் தோல்வியிலுமே போய் முடிந்தது.*

*தேவனுடைய இராஜ்யத்திற்கான நீண்ட கால தேடுதல் இருந்தது.*

*தப்பிப்பதற்கான வழி இருக்கிறது என்று இயேசு அறிவித்தார். உங்களுக்கு ஒரு நற்செய்தி இருக்கிறது. உங்களுக்காக ஒரு இராஜ்யம் காத்திருக்கிறது. நீங்கள் அந்த இராஜ்யத்தின் பிரதிநிதிகளாய் மாற முடியும் என்பதே அந்த நற்செய்தி.*

***இராஜ்யத்திற்குள் உங்களை கொண்டுசெல்லும் அந்த நற்செய்தி என்ன?***

***1 கொரிந்தியர் 15:3-5, நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, 4. அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, 5. கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.***

*இயேசு உனக்காக மரித்தார்.*

*அவர் உனக்காக உயிர்த்தெழுந்தார்.*

*உன்னுடைய பாவத்திற்கான விலைக்கிரயம் செலுத்தப்பட்டாயிற்று.*

*உன்னுடைய நித்திய வாழ்க்கை உறுதிசெய்யப்பட்டது.*

*நீ தேவனுடைய இராஜ்யத்தில் இருக்க முடியும்.*

*இதுவே நற்செய்தி!*

*இரட்சிப்பின் திட்டமே நற்செய்தி.*

*அவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருந்தால், இஸ்ரவேல் தேசம் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள்ளாய் தஞ்சமடைந்திருந்தால், தேவனுடைய இராஜ்யம் அப்போதே அங்கே வந்திருக்கக்கூடும். அது மாம்ச ரீதியான ஆயிரவருட நிறைவேறுதல். ஆனால் அவர்கள் நிராகரித்துவிட்டனர். ஆகையால் ஆயிரவருட ஆட்சி தள்ளிபோயிற்று. ஆனால் தனிப்பட்ட ரீதியில் ஒருவர் இயேசுவை ஏற்றுக்கொண்டால் அவர்கள் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தேவனுடைய குமாரனுடைய ஆதிக்கத்திற்கு உட்படுவது அதிக நிச்சயம்.*

*ஆகையால் இயேசு இராஜ்யத்தின் சுவிசேஷத்தை போதித்து பிரசங்கம்பண்ணியதின் மூலம் அவரே ராஜா என்று அறிமுகப்படுத்துகிறார்!*

*"நானே ராஜா, எனக்கு ஒரு இராஜ்யம் இருக்கிறது" என்று இயேசு சொன்னார்.*

## *அவருடைய ஊழியம்:*

***வச. 23, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.***

*அவருடைய வார்த்தைகளில் மட்டுமின்றி, அவருடைய செயல்களிலும் அவருடைய மகத்துவத்தை பார்க்கமுடியும். அவர் எல்லோருக்கும் சுகம் கொடுத்தார் என்று இங்கே சொல்லப்பட்டுள்ளது. அவரை நாடி வந்த அனைவருக்கும் அவர் சுகம் கொடுத்தார்.*

*சுகம் கொடுக்காமலேயே அவருடைய வார்த்தைகளே அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்தியிருக்கும். தங்களுக்காகவோ அல்லது தங்களுடைய சிநேகிதர்கள் மற்றும் உறவினர்களுக்காக, சுகம் தேவைப்படாத அநேகர் அவரைப் பின்பற்றினார்கள்.*

*பிரசங்கமும் போதனையும் முதலில் இடம்பெறுகிறது. அதற்கு பின்பு சொஸ்தமாக்குதல் அதனோடு இணைந்துகொள்கிறது. அவர் போதிக்க துவங்கினதும், அவருடைய சீஷர்களும் அதற்கு செவிகொடுத்து, அதை விசுவாசித்து பின்பற்றத் துவங்கினர். கானா ஊரில் இயேசு தன்னுடைய முதல் அற்புதத்தை நடப்பிக்கும் முன்னரே சீஷர்கள் அவரோடு இருக்கிறார்கள். அவர்கள் அற்புதங்களை பார்ப்பதற்காய் மாத்திரம் வரவில்லை.*

*யோவான் ஸ்நானகன் எண்ணற்ற ஜனங்களை தன்னிடமாய் வரவழைத்து, அவர்களுக்கு மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார். யோவான் ஸ்நானகன் அற்புதம் ஏதும் செய்ததில்லை.*

***யோவான் 10:41, அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்.***

*இயேசுவின் அற்புத சுகமளிக்கும் செயல்கள் அவருடைய வார்த்தைகளுக்கு இன்னும் பலம் சேர்த்தது.*

*கிறிஸ்து செய்த அற்புத அடையாளங்களின் சரியான எண்ணிக்கை நமக்கு தெரிந்திருக்கிறதா என்று நாம் சந்தேகிக்கலாம். வேதத்தில் பதிவு செய்யப்பட்டவைகள் அவர் நடப்பித்த அற்புதங்களில் சிலவைகளே. அவர் நடப்பித்த ஆரம்ப அற்புதங்கள் அவருடைய இராஜ்யத்தின் தன்மையை விவரிக்கிறது. அவருடைய இராஜ்யத்தின் காரியங்களை பிரதிபலிப்பதற்கு அவருக்கு கிடைத்த முதல் பரிசுகள் இந்த அற்புதக் கிரியைகள்.*

***எபிரெயர் 6:4, ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,***

*நீங்கள் அற்புத அடையாளங்களையும், பரிசுத்த ஆவியின் வரங்களின் செயல்பாடுகளையும் வைத்து நீங்கள் போதித்த சுவிசேஷத்தை நிரூபித்திருக்கிறீர்கள்.*

*எபிரெயர் 1-4 அதிகாரங்கள்.*

*அதினால் தான் மத்தேயு 13ஆம் அதிகாரத்தில் விசுவாசியாத பரிசேயர்களால் இயேசு கண்டிக்கப்படுகிறார். அவர்கள் இராஜ்யத்தின் வல்லமையை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இவரே ராஜா என்பதை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டனர்.*

***ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.***

*இயேசு கிறிஸ்து எல்லா வகையான வியாதிகளையும் நோய்களையும் குணமாக்கினார். அவருடைய இந்த செய்கை கலிலேயா முழுவதிலும் பிரசித்தமாயிற்று.*

***வச. 24, அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார்.***

*இந்த சொஸ்தமாக்குதல் மூன்று காரியங்களை உள்ளடக்குகிறது.*

1. *செய்தி தெய்வீகமானது.*

2. *அவரே மேசியா என்பதை தீர்க்கதரிசனங்கள் உறுதிபடுத்துகிறது.*

3. *இராஜ்யம் வருகிறது.*

***1. செய்தி தெய்வீகமானது.***

*அவருடைய சொஸ்தமாக்கும் ஊழியம் அவருடைய செய்தி தெய்வீகமானது என்பதை உறுதிப்படுத்தியது. ஒரு சராசரி மனிதன் அற்புதங்களை செய்ய முடியாது என்பதினால் இயேசு தெய்வீகமானவர் என்பதை இந்த குணமாக்குதல் நிரூபித்தது. இவைகள் அவருடைய தெய்வீகத்திற்கான வெளிப்படையான சான்று.*

***யோவான் 14:11, நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.***

*தேவன் அவரில் இருக்கிறார் என்பதற்கும் அவர் தேவனில் இருக்கிறார் என்பதற்கும் அவைகள் ஆதாரங்களாயிருக்கிறது.*

***2. அவரே மேசியா என்பதை தீர்க்கதரிசனங்கள் உறுதிபடுத்துகிறது.***

*அற்புதங்களை நடப்பிக்கும் வல்லமையுள்ள மேசியாவை பழைய ஏற்பாடு அறிமுகப்படுத்துகிறது.*

***மத்தேயு 11:2-5, அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக்குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து: 3. வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். 4. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; 5. குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.***

*இதுபோன்ற கிரியைகளை மேசியா செய்வார் என்று தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். இதுபோன்ற காரியங்களை இராஜ்யம் கொண்டுவரும் என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார். ஆகையால் இயேசு தெய்வீகமானவர் என்பது இதிலிருந்து நிரூபனமாகிறது.*

***3. இராஜ்யம் வருகிறது.***

*இராஜ்யம் வந்துகொண்டிருக்கிறது என்பதையும் அவருடைய குணமாக்கும் செய்கைகள் நிரூபித்தது. ராஜா தன்னுடைய இராஜ்யத்தை நிரூபிப்பதற்கான முதலாவது பரிசு இந்த சுகமாக்கும் ஊழியம். இவைகள் எதிர்காலத்தில் எண்ண நிகழப்போகிறது என்பதற்கான சிறிய அறிமுகம்.*

***மத்தேயு 9:35, பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.***

***மத்தேயு 10:7-8, போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். 8. வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.***

*இவைகள் இராஜ்யத்தை ருசிபார்க்கும் காரியங்கள். இராஜ்யத்தின் பிரசங்கத்திற்கும் இராஜ்யத்தைக் குறித்த போதனைக்கும் எப்போதும் தொடர்புடையது.*

***மத்தேயு 12:28, நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.***

*இராஜ்யம் இங்கே இருக்கிறது. ராஜா வந்துவிட்டார். ஏனெனில் பிசாசுகள் துரத்தப்படுவதையும், முடவன் குணமாக்கப்படுவதையும், குருடர் மற்றும் செவிடர் சொஸ்தமாவதையும் நீங்கள் பார்க்கிறீர்கள்.*

***லூக்கா 9:1-2, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, 2. தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.***

*சீரிய தேசம் ரோம எல்லைக்கு உட்பட்டிருந்தது. அது கலிலேயாவையும் பாலஸ்தீனத்தையும் உள்ளடக்கியிருந்தது. அது மிகவும் பெரிய பூகோள நிலப்பரப்பாயிருந்தது.*

*தமஸ்குவுக்கு போகிற வழியில் அமைந்திருந்த கப்பர்நகூமே இயேசுவின் தலைமைச் செயலகமாய் செயல்பட்டது. இயேசுவின் இந்த சுகமாக்கும் செய்தி தீ போல பரவி, சீரிய தேசமெங்கிலுமிருந்து பிணியாளிகள் வரத்துவங்கினார்கள். நம்முடைய நாட்களில் இருக்கும் மருந்துகள் போல அந்நாட்களில் இல்லை என்பதை நாம் கற்பனை செய்ய முடியும். நோய் தொற்று வெகுவாய் பரவியது, வாதைகள் பிரச்சனையாயிருந்தது, எங்கும் மரணங்கள் சம்பவித்துக்கொண்டிருந்தது.*

*அற்புத சுகம் இங்கு கிடைக்கிறது என்பதை மக்கள் கேள்விப்பட்ட மாத்திரத்தில் அவர்கள் தங்களிலிருந்த பிணியாளிகளை கொண்டுவரத் துவங்கினர்.*

*மத்தேயு மூன்று காரியங்களை குறிப்பிடுகிறார்:*

*"சகல வியாதிகளையும் சகல நோய்களையும்"*

*வியாதிக்கும் அதின் அறிகுறிக்கும் உள்ள வித்தியாசம். பல்வேறு வியாதிகள் வேதனைகளை உண்டுபண்ணுகிறது. அங்கே வாதிக்கப்பட்டு வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த மக்கள் இருந்தனர். வியாதியின் மூலமும் அதின் அறிகுறிகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர் மூன்று உதாரணங்களை தருகிறார்.*

*முதலாவது, பிசாசினால் அனுமதிக்கப்பட்ட வேதனைகள்.*

*அவர்கள் பிசாசு பிடித்தவர்கள் (டைமோனிஸோமாய், டெய்க்மஸ்டிமஸ்)*

*இவர்கள் பிசாசினால் பீடிக்கப்பட்ட மக்கள்.*

*பெரும்பாலான வியாதிகள் பிசாசினால் தோற்றுவிக்கப்படுகிறது. அதை நாம் வேதத்தில் பார்க்கமுடியும்.*

*பெரும்பாலான நோய்களுக்கு பிசாசுகளே காரணம்.*

*மத்தேயு சுவிசேஷமெங்கிலும் அதை நாம் காணமுடியும்.*

*இயேசுவால் அதை கையாள முடிந்தது.*

***அதை கையாளுவதற்கான வரம் எது?***

*சுகமாக்கும் வரம்.*

*அற்புதத்தைக் குறிக்கும் வார்த்தை "டுனாமிஸ்," "வல்லமையின் வரம்." இயேசு பிசாசை விரட்டும் போதெல்லாம் இந்த பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்கள் காலகட்டத்தில் இந்த வரமானது, அப்பம் சுடுவதற்கும், வாகனத்தை உண்டுபண்ணுவதற்கும், தண்ணீரின் மேல் நடப்பதற்கும் பயன்படுத்தப்படவில்லை. அது போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை அப்போஸ்தலர்கள் ஒருபோதும் செய்ததில்லை. ஆனால் இயேசு செய்திருக்கிறார். அற்புதங்களை செய்யும் வரமானது பிசாசுகளை விரட்டுகிறது. இது இருளின் இராஜ்யத்திற்கு எதிரானது. இயேசுவுக்கு அந்த வல்லமை இருந்தது. அவரால் பிசாசுகளை துரத்த முடியும். அப்படியென்றால், பிசாசினால் ஏற்படுத்தப்பட்ட வியாதியையும் சுகமாக்க முடியும்.*

*இரண்டாவது, "லுனாடிக்." அது வலிப்பு நோய் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.*

*"லுனாடிக்" என்ற வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து தோன்றியது. அதில் "லுனா" என்ற முதல் பகுதிக்கு நிலா என்று பொருள். அந்நாட்களில் மக்கள் நிலாவினால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று நம்பியிருந்தனர். அது லுனார் வியாதி என்று அழைக்கப்படுகிறது.*

*அதை அவர்கள் சந்திரரோகம் என்று அழைத்தனர். அங்கிருந்தே இந்த "லுனாடிக்" என்பதின் பொருளை நாம் அறிகிறோம்.*

***மத்தேயு 17:15, ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்.***

*ஆகையால் பிசாசு தோற்றுவிக்கும் அனைத்து வியாதிகளையும் இயேசு சுகமாக்கினார். மூளையில் ஏற்பட்ட கோளாறுகள், நரம்பியல் வியாதிகள் என்று அனைத்து விதமான வியாதிகளையும் இயேசு சுகமாக்கினார்.*

*முடக்கு வாதம் என்று நாம் இன்று அழைக்கக்கூடிய வியாதிகளையும் இயேசு சொஸ்தமாக்கினார்.*

*மத்தேயுவில் நாம் பார்த்தோமென்றால், அவர் பிசாசுகளை துரத்தி சுகமாக்கியதை நாம் பார்க்கமுடியும்.*

*வலிப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் மீது இயேசு அக்கறை காட்டினார்.*

*சரீரப்பிரகாரமாய் பாதிக்கப்பட்ட மற்றும் வாத நோய்களினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்கள் மீதும் இயேசு பரிவு காட்டினார்.*

*இராஜ்யத்தை பிரதிபலிக்கும் அழகான புகைப்படம். அங்கே எந்த பிசாசும் இருக்காது. சாத்தானும் கட்டப்படுவான்! எல்லா பிசாசுகளும் அந்திக்கிறிஸ்துவோடும் கள்ள தீர்க்கதரிசிகளோடும் அக்கினி கடலிலே தள்ளப்படுவர்.*

*அங்கே ஆரோக்கியம் தங்கியிருக்கும்.*

***மல்கியா 4:2, ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.***

***ஏசாயா 35:4-7, மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். 5. அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். 6. அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். 7. வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்.***

***தேவன் இன்றும் சுகம் கொடுக்கிறாரா?***

*ஆம்! நிச்சயமாக!*

*ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளை நீங்கள் வாசித்துப் பார்த்தால், அற்புத அடையாளங்களின் விகிதங்கள் படிப்படியாய் சரிவைக் கண்டு, கடைசியில் அவைகள் இல்லாமலேயே போய்விடுவதை காணலாம்.*

*பவுல் தீமோத்தேயுவுக்கு நிருபம் எழுதும்போது, ''சகோதரா, உனக்கு எப்படி சுகமாக்கிக்கொள்வதென்று தெரியும், நீயே உன்னை சொஸ்தமாக்கிக் கொள்'' என்று சொல்லவில்லை. மாறாக, ''உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்'' என்று அறிவுறுத்துகிறார்.*

*''துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்'' என்றும் ஒரு இடத்தில் கூறுகிறார்.*

*"எப்பாப்பிரோதீத்து.. வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" என்றும் கூறுகிறார்.*

*இதுபோன்ற தருணங்களில் பவுலால் எதுவும் செய்ய முடியவில்லை. இஸ்ரவேல் தங்களுடைய ராஜாவுக்கு புறமுதுகைக் காட்டியதிலிருந்து இராஜ்யம் இங்கே இருக்கிறது என்று அறிவிக்கும் தேவை இல்லாமல் போனதினால், அவைகள் மங்கிப்போனது.*

*இயேசு சுகமாக்கிய வரத்தை பிரயோகப்படுத்தியபோது, அதிலிருந்து நகல் எடுக்கமுடியாத ஆறு குணாதிசயங்கள் இருக்கிறது. இயேசு தன்னுடைய வல்லமையைக் கொடுத்த அப்போஸ்தலர்களைக் கடந்து யாரும் அதை பயன்படுத்தமுடியாது.*

***1. இயேசு வார்த்தையினாலும் தொடுதலினாலும் சுகம் கொடுத்தார்.***

*தொடுதல் அல்லது வார்த்தை. "நீர் ஒரு வார்த்தை சொல்லும், என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று இயேசுவிடம் ஒரு மனிதன் சொல்லுவதை சற்று சிந்தித்துப் பாருங்கள். வார்த்தை அல்லது தொடுதல் குறித்து அவன் அறிந்திருந்தான். அவர் அந்த குறிப்பிட்ட இடத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரால் சுகம் கொடுக்கமுடியும்.*

***2. அவர் உடனடியாய் சுகம் கொடுத்தார்.***

*அவர் குருடனுக்கு சுகம் கொடுத்தபோது, கொடுத்த மாத்திரத்தில் அவன் பார்வையடைந்தான்.*

*அவர் ஊமையனுக்கு சுகம் கொடுத்தபோது, அவன் உடனே பேசினான்.*

*அவர் செவிடரை சொஸ்தமாக்கிய போது, அவன் உடனே கேட்டான்.*

*அது சரியாகிவிடும், இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று மழுப்பவில்லை. மேடை மீது கிடைக்கிற சுகங்கள் இல்லை.*

***3. அவர் பூரணமான சுகம் கொடுத்தார்.***

*அரைகுறையான சுகம் அல்ல. அவர் பூரணமாய் சுகம் கொடுத்தார்.*

***4. அவர் எல்லோரையும் சுகமாக்கினார்.***

***லூக்கா 4:40, சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.***

*எந்த பாகுபாடும் இல்லாமல், எந்த பாரபட்சமும் இல்லாமல், எல்லா வியாதிகளையும், ரோகங்களையும் அறிகுறிகளையும் சுகமாக்கினார்.*

***5. இயேசு சரீர கோளாறுகளை சுகமாக்கினார்.***

*அவர் சரீரப் பிரகாரமான கோளாறுகளை குணமாக்கினார். அதாவது, சூம்பின கையுடைய மனிதனுடைய கையை வளரச்செய்து முழுமையானதாய் மாற்றினார். ஊனமுற்றவர்கள் எழுந்து ஓடினர்.*

*பேதுருவும் யோவானும் தேவாலயத்தின் வாசலில் இருந்த வியாதியஸ்தனுக்கு சுகம் கொடுத்தபோது, அவன் எழுந்து தேவாலயம் எங்கும் ஓடித் திரிந்தான்.*

***6. இயேசு மரித்தோரை உயிரோடு எழுப்பினார்.***

*அவரால் செய்ய முடிந்த, விரும்பின அனைத்தையும் அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தார்.*

*அவைகள் ராஜாவின் அங்கீகாரங்கள். அவற்றை அவர் அப்போஸ்தலர்களுக்கு பகிர்ந்துகொடுத்தார்.*

*இயேசு சரியான தருணத்தில், சரியான இடத்தில், சரியான செய்தியோடு, சரியான பங்காளர்களோடு, சரியான திட்டத்தோடு, கடைசியாய் சரியான விளைவுகளோடு ஊழியத்தை செய்து முடித்தார்.*

***வச. 25, கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.***

*"திரளான ஜனங்கள்" என்பதற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை "ஒக்லோஸ்." அதற்கு வெறும் கூட்டம் என்பது அர்த்தமல்ல; மாறாக, பிரம்மாண்டமான, பலதரப்பட்ட, கலப்பு மக்கள் கூட்டம் என்று பொருள்.*

*அதைத்தான் அவர் விரும்பினார். தெக்கப்போலியிலிருந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தெக்கபோலி என்பது பத்து கூட்டாட்சி நகரங்களை உள்ளடக்கிய கலிலேயாவுக்கு வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. "எருசலேமிலும் யூதேயாவிலும்" தெற்குப்பகுதியில் அமைந்துள்ளது. கிழக்குப் பகுதியில், யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள பெரா என்ற பகுதியிலிருந்தும் திரளான மக்கள் வந்து இராஜ்யத்தை ருசிபார்த்தனர்.*

***இராஜ்யத்தில் என்ன நிகழும் என்று உங்களுக்குத் தெரியுமா?***

*உலகம் முழுமையும் இயேசுவின் பாதத்தில் ஒன்று திரளும்.*

*இது இராஜ்யத்தைக் குறித்த சிறிய வெளிப்பாடு தான்.*

*அனைத்து சுகம் பெற்றவர்களும், பிசாசு விரட்டப்பட்டவர்களும், இரட்சிப்பின் அனைத்து செய்தியை கேள்விப்பட்டவர்களும், முழு உலகமும் இயேசுவை நோக்கி வருகிறது. அதுவே தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த முழுமையான சித்திரம்.*